# 3

# ஜாமிஆ நளீமிய்யாவின் கலைத்திட்ட வழிகாட்டி அறிஞர் எ. எம். எ. அஸீஸ்



அபூபக்கர் முஹம்மத் அப்துல் அஸீஸ் 04.10.1911 இல் யாழ்ப்பாணத்தில் பிறந்தார். அன்னாரின் தந்தை அபூபக்கர் அவர்கள் யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற வழக்கறிஞரும் காதி நீதிபதியுமாவர். அவர் யாழ். நகரசபை உறுப்பினராகவும் உபதலைவராகவும் பணியாற்றியதுடன் அகில இலங்கை முஸ்லிம் லீக் தலைவராகவும் இருந்துள்ளார். கொழும்புக்கு வெளியே வாழ்ந்த முஸ்லிம்களில் இவரே இப்பதவியை முதலில் வகித்தவராவார். தாயாரின் பெயர் சுல்தான் முஹிதீன் நாச்சியா. வாழ்க்கைத் துணைவி உம்முகுல்தூம்.

யாழ். வைதீஸ்வரா வித்தியாலயம், யாழ்ப்பாணக் கல்லூரி, கொழும்பு சென் ஜோசப் கல்லூரி, இலங்கைப் பல்கலைக்கழகம், கேம்பிரிஜ் கேதரின் கல்லூரி என்பனவற்றில் பயின்ற எ. எம். எ. அஸீஸ், லத்தீன் மொழியைக் கற்றதுடன் தமிழ், ஆங்கிலம் என்பனவற்றில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். இலங்கை முஸ்லிம் கல்வி மறுமலர்ச்சிக்குப் பங்காற்றியோரில் அறிஞர் அஸீஸுக்கும் பெரும் பங்குண்டு.

இலங்கை சிவில் சேவையில் (C.C.S) இணைந்த முதல் முஸ்லிம் (1935), என்ற பெருமைக்குரிய அஸீஸ் அவர்கள் இலங்கை நிருவாக சேவையின் பல உயர் பதவிகளை வகித்தவர். பின்னர் டீ.பி. ஜாயா அவர்களினால் கொழும்பு ஸாஹிறாவின் அதிபர் பதவி (1948 - 1961) அவருக்கு ஒப்படைக்கப்பட்டபோது, சிவில் சேவையைத் துறந்து ஸாஹிறாவை அவர் பொறுப்பேற்றார். அஸீஸ் அவர்கள் இலங்கைப் பாராளுமன்ற செனற் சபை உறுப்பினராயிருந்ததுடன் (1952) பொதுச் சேவை ஆணையாளராகவும் சேவையாற்றியுள்ளார்கள் (1963).

எ. எம். எ. அஸீஸ், பல உலக நாடுகளுக்கும் பயணம் செய்து பல்வேறு அனுபவங்களையும் பெற்றவர். சோவியத் ரஷ்யா, அமெரிக்கா, ஆபிரிக்க நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் என, பல்வேறு நாடுகளுக்கும் அவர் பயணித்துள்ளார். தனது பயணங்களின்போது போது அறிஞர்களை

சந்திப்பதிலும் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி கலாசார பண்பாடுகளைத் தெரிந்து கொள்வதிலும் ஆர்வம் காட்டினார்.

இலங்கையில் இஸ்லாம், மிஸ்ரின் வசியம், தமிழ் யாத்திரை, கிழக்காபிரிக்கக் காட்சிகள், ஆபிரிக்க அனுபவங்கள், அறபுத்தமிழ் எங்கள் அன்புத் தமிழ், The West Re Appraised உட்படப் பல நூல்களின் ஆசிரியரான அஸீஸ், தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரின், 'இலங்கையில் இஸ்லாம்' என்ற நூலுக்கு அரச சாகித்ய மண்டலப் பரிசு கிடைத்தது.


அஸீஸ் அவர்கள் பொதுச் சேவையில் ஆர்வமிக்கவர். ''அஸீஸிடம் இரு பெட்டிகள் எப்போதும் இருக்கும். ஒன்று சிவில் சேவைக்குரியது. மற்றயது சமூகசேவைகள் சம்பந்தமானது' என அமைச்சர் டி. பி. இலங்கரத்தின ஒருமுறை குறிப்பிட்டுள்ளார். கல்முனை உதவி அரசாங்க அதிபராக அஸீஸ் இருந்த காலப்பகுதியில், அங்கிருந்த பிரமுகர்களுடனும் ஊராருடனும் இணைந்து விவசாய உற்பத்தி நடவடிக்கைகளை அவர் ஊக்குவித்தார். இலங்கை முஸ்லிம்களின் கல்வி அபிவிருத்திக்கு எவ்வாறு திட்டமிடவேண்டுமென்ற எண்ணம், தனது கல்முனை வாழ்வின் அனுபவமே பெற்றுத்தந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

19.05.1945 இல் அகில இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியை (The Ceylon Muslim Scholarship Fund - C.M.S.F.) அஸீஸ் தாபித்தார். 29.07.1944 இல் ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்கத்தின் (Y.M.M.A) தந்தை எ.எம்.எ. அஸீஸ் அவர்களே. Y.M.M.A. பேரவையின் பொது நோக்கங்களில் 'கல்வி அபிவிருத்தி' பிரதான இடம்பெற்றது. மத்திய கிழக்கில் எகிப்து, சூரியா, லெபனான், பாலஸ்தீனம் போன்ற நாடுகளிலும் Y.M.M.A. அமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. எகிப்து Y.M.M.A., 1927 இல் தாபிக்கப்பட்டதாகும்.

அறிஞர் சித்திலெப்பையின் காலத்தில் நமது சமூகம், ஆங்கிலக் கல்வியின்மீதான அதிருப்தி காரணமாக அன்றைய உலக நிகழ்வுகளையும் மாற்றங்களையும் அறிந்துகொள்வதிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தது. எ.எம்.எ. அஸீஸ், இலவசக்கல்வி அமுல்படுத்தப்பட்டுக்கொண்டிருந்த தமது காலத்தில், இவ்விடைவெளியை நீக்கி, ஆங்கிலக் கல்வியின் தாக்கம் நமது சமூகத்தைப் பாதிக்காதவகையில், அக்கல்வியை சாதகமாகப் பயன்படுத்தி, சமூகப் புனரமைப்பை ஏற்படுத் துவதில் சிரத்தைகொண்டார்.

அறிஞர் எ.எம்.எ. அஸீஸ் அவர்கள் ஜமாலுதீன் ஆப்கானி, சேர் செய்யத் அஹ்மத்கான், முஹம்மது அப்து, அல்லாமா இக்பால் போன்றோரின் சிந்தனைகளால் பெரிதும் கவரப்பட் டார்கள். மேலைத்தேய நாடுகளுடன் அவர் வைத்திருந்த தொடர்புகள், அவரது சிந்தனையை விரிவாக்கி கீழைத்தேய தத்துவங்கள், மரபுகள் போன்றவற்றுடன் அவற்றை ஒப்பிட்டு ஆராயும் சந்தர்ப்பத்தை அவருக்கு வழங்கியது. உலமாப் பெருமக்களுக்கும் மேற்கத்தேய கல்விமுறையில் பயின்றோருக்கும் இடையில் நிலவிய இடைவெளியைக் குறைத்து பழைமையும் புதுமையையும் இணைப்பதற்குத் தாம் ஒரு பாலமாக இருக்கவேண்டும் என அறிஞர் அஸீஸ் விரும்பினார்.

நூலகம், வெளியீட்டகம், சுவடிக்காப்பகம், ஆராய்ச்சி நிலையம், கேட்போர்கூடம், கலாபவனம் போன்றவற்றைக்கொண்ட, இலங்கை முஸ்லிம்களுக்கான கலாசார மத்திய



**கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில், கலாசார மத்திய நிலையத்தை நிறுவுவதற்கான அத்திவாரக்கல் நடப்பட்ட நிகழ்வில் சபாநாயகர் எச்.எஸ். இஸ்மாயில் உரையாற்றுகிறார். அருகில் நிற்பவர் கல்லூரி அதிபர் ஏ.எம்.ஏ. அஸீஸ்**

**புகைப்பட உதவி:** *எச்.எம். ஜஹ்பர் (எச்.எஸ்.இஸ்மாயில் அவர்களின் மருமகன், புத்தளம்)*

*நிலையம் ஒன்றை, கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் அவர் அதிபராக இருந்தபோது நிறுவ முயன்றார். 18.03.1958 இல் அதற்கான அத்திவாரக்கல், சபாநாயகர் எச்.எஸ். இஸ்மாயில் அவர்களால் நடப்பட்டது. எஸ்.எல்.எம். ஷாபி மரிக்கார் ஸாஹிறாவின் அதிபராக இருந்தபோது, செப்டம்பர் 1977 இல் இக்கட்டிடம் பூர்த்திசெய்யப்பட்டது. இந்நிலையம் பற்றி ஏ.எம்.ஏ. அஸீஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ''ஸாஹிறாக் கல்லூரி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மட்டுமன்றி சாதி, சமய, நிற பேதமில்லாமல் பொதுமக்கள் அனைவருக்கும் இம் மன்றத்தின் வசதிகள் அளிக்கப்படும்''.*

*முஸ்லிம்களின் கலாசார நிகழ்வுகளை முறைமைத்துவப்படுத்த அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள், சில உலமாக்களால் 'பித்அத்' என விமர்சிக்கப்பட்டபோதும் அவர் அதனைப் பொருட்படுத்தவில்லை. பொருத்தமான இஸ்லாமிய இலக்கியங்கள் முஸ்லிம் மாணவர்களின் பாடநூல்களாக்கப்படல் வேண்டும் என்று அவர் குரலெழுப்பினார்.*

*அஸீஸின் 'எமக்கு ஒரு ஜாமியாஹ்' என்ற கட்டுரைக்கும், ஸாஹிறாவில் அவர் நிறுவ முனைந்த 'கலாசார நிலையத்துக்கு'மிடையில் தொடர்பு இருப்பதாக அஸீஸ் காலத்து ஸாஹிறாவின் ஆசிரியரும், எழுத்தாளரும், நூலகருமான எஸ்.எம். கமாலுத்தீன் குறிப்பிடுகின்றார்.*

ஜாமிஆ நளீமிய்யாவின் தோற்றத்துக்கும் அதன் ஆரம்பகால செயற்பாடுகளுக்கும் பங்களிப்பு செய்தவர்களுள் பிரதானமானவர் எ. எம். எ. அஸீஸ் ஆவார். 1941 இல் 'முஸ்லிம் மித்திரனில்' அவர் எழுதிய, 'மத அறிவைப் புகட்டக்கூடிய ஒரு மத்திய முஸ்லிம் கலாசாலை' என்ற கட்டுரை 1963 இல் வெளியிடப்பட்ட 'இலங்கையில் இஸ்லாம்' என்ற நூலில் 'எமக்கு ஒரு ஜாமியாஹ்' என்ற தலைப்பில் மீண்டும் இடம்பெற்றது. இந்நூலில் 'ஜாமிஉல் அஸ்ஹர்' என்ற தலைப்பில் உலகின் முதன்மையான பல்கலைக்கழகம் என்று பெயர்பெற்ற அல் அஸ்ஹர் பற்றிய கட்டுரைக்கு அடுத்து, 'எமக்கொரு ஜாமியாஹ்' என்ற கட்டுரை இடம்பெற்றிருப்பது அவரின் தூரசிந்தனைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இருபத்தியாறு கட்டுரைகளை உள்ளடக்கிய 'இலங்கையில் இஸ்லாம்' என்ற நூல், 'நவயுக சிற்பி சித்திலெப்பை' என்றதொரு தலைப்பையும் உள்ளடக்கி, கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ் அவர்களால் செவ்விதாக்கப்பட்டு, 2007 இல் குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது.

> 'உமது ஆண்டவனின் பாதையளவில் புத்தியாயும் அழகான போதனைகளுடனும் (அவர்களை) நீர் கூப்பிடும். சிறந்தவையும் மிக அழகானவையுமான முறைகளில் அவர்களுடன் நீர் தர்க்கியும்'.
>
> (குர்ஆன் 16:125)

'எக்காலத்திற்கும் சிறந்த மதப் போதனைக் கோட்பாடுகள் இந்த அற்புத வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் அத்தகைய இலட்சணங்களுள்ள மதப் போதகர்கள் எங்கே இருக்கின்றனர்'? என்ற வினாவுடன் 'எமக்கொரு ஜாமியாஹ்' என்ற கட்டுரை தொடங்குகின்றது.

தனது கட்டுரையில், நவீன சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய, சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு தரக்கூடியவர்களை உருவாக்கும் ஒரு கலாநிலையம் அமைக்கப்படல் வேண்டும் என்று குறிப்பிடும் அஸீஸ் அவர்கள், 'மத அறிவைப் புகட்டக்கூடிய ஒரு மத்திய முஸ்லிம் கலாசாலை ஒரு யோசனையாக மாத்திரம் முடிந்துவிடாமல் ஒரு நல்ல காலம் அதை எதிர்பார்த்து நிற்கின்றது என நம்பிப் பிரார்த்திப்போமாக' என அக் கட்டுரையை நிறைவுசெய்கின்றார்.

ஜாமிஆ நளீமிய்யா தொடங்கப்படும்போது வெளியிடப்பட்ட ஜாமிஆ பற்றிய அறிமுகக் கையேட்டுக்கும் அறிஞர் அஸீஸின் சிந்தனைகளுக்கும் இடையில் நெருக்கமான தொடர்புகளை அவதானிக்கலாம். இக்கையேட்டைத் தயாரிப்பதில் அஸீஸின் பங்கும் பிரதானமானதாகும்.

ஜாமிஆ வளாகத்தின் அமைப்பு அதன் கட்டிடங்கள் போன்றன இஸ்லாமிய கலாசாரத்தை பிரபலிக்கும் வகையில் அமையவேண்டுமென்பதில் அஸீஸ் அதிக கரிசனை காட்டியதாக கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அவர்கள் தனது, 'நளீம் ஹாஜியார் வாழ்வும் பணியும்' என்ற நூலில் தெரிவிக்கின்றார். மஸ்ஜித்துகளின் கலை வடிவங்களால் கவரப்பட்டிருந்த அவர் தனது வெளிநாட்டுப் பயணங்களில், மஸ்ஜிதுகளைப் பார்வையிடுவதற்கென நேரம் ஒதுக்கினார். அவரது 'மிஸ்றின் வசியம்' என்ற நூலில் 'மிஸ்றின் மசூதிகள்' என்ற ஒரு கட்டுரையும் இடம்பெற்றுள்ளது.

*ஜாமிஆ நளீமிய்யா பற்றிய கையேட்டில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. 'இலங்கையில் அறபு முஸ்லிம்கள் முதலில் குடியேறியதாகக் கருதப்படும் வேருவலை (பெர்பரீன்) இல் நிறுவப்பட்டுவரும் இந்த ஜாமிஆ, இலங்கை வாழ் முஸ்லிம்களின் கலாசார மத்திய தலமாகவும் சமுதாய எழுச்சிக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் தூண்டுகோலாகவும் அமையும். வளாகத்தின் மத்தியில் கண்ணைக் கவரும் வகையில் இஸ்லாமியக் கட்டிடக் கலைச் சிறப்பை உணரத்தக்க கூடிய வகையில் ஒரு மஸ்ஜித் கட்டப்படுகின்றது. அமைப்பிலும் வனப்பிலும் ஜாமிஆவின் சிறப்பம்சமாக இப்பள்ளிவாசல் அமையும். இந்த ஜாமிஆவில் பயிலும் மாணவர்களுக்குப் பரந்த இஸ்லாமிய அறிவைப் புகட்டுவதோடு இஸ்லாமிய வாழ்க்கைமுறை, பழக்கவழக்கங்கள் என்பனவற்றில் பயிற்சியளிக்கும் நோக்கத்துடனேயே இம் மஸ்ஜித் எழுப்பப்படுகின்றது. இஸ்லாமிய அறிவின் சின்னமாக ஜாமிஆவும் இஸ்லாமிய வாழ்க்கை முறைப் பயிற்சியின் சின்னமாக மஸ்ஜிதும் அமையும்.*



***இடமிருந்து வலம்:*** *1.* S.Z.M. *மசூர் மௌலானா (செனட்டர்), 2.* ............ *3. அல்ஹாஜ்* M.I.M. *நளீம் 4. செய்ன் (கொழும்பு மாநகர பிரதி மேயர்) 5. இனாமுல்லாஹ்கான் (*Founder & World Muslim Congress) *6. எ.எம்.எ. அஸீஸ் 7. ஏ.எம். அமீன் (நீதிபதி)*

***புகைப்பட உதவி:*** https://azeezfoundation.com

***இனம்காண உதவி:*** A.M. *நஹியா, (முன்னாள் உதவி அதிபர், மருதானை ஸாஹிறாக் கல்லூரி)*

*ஜாமிஆவின் பாடத்திட்டத்தினை வரைவதிலும் எ.எம்.எ. அஸீஸ் பிரதான பங்கேற்றார். ஜாமிஆ நளீமிய்யா தொடங்கப்பட்டபோது அதன் பாடத்திட்டத்தை அமைப்பது சிரமமாக இருந்தது. எண்ணங்கள் செயலுருப்பெறும்போது ஏற்படும் சவால்களே அவை. சன்மார்க்கக் கல்வியையும் அரச பாடசாலைகளின் பாடத்திட்டத்தையும் இணைத்துக் கற்பிக்கும் நடைமுறை இலங்கையின் எப்பாகத்திலும் அப்போது இருக்கவில்லை. பாடத்திட்டம் பற்றி கலந்தாலோசிக்கவென ஒரு கூட்டம் நளீம் ஹாஜியாரின் வெள்ளவத்தை இல்லத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட அறிஞர் அஸீஸ், ''பாகிஸ்தான் போன்றதொரு முஸ்லிம் நாட்டுக்குச் சென்று, அங்குள்ள கலாநிலையங்களையும் அறிஞர்களையும் தரிசித்து, ஆலோசனைகளைப் பெறுவது சிறந்தது'' எனக் கருத்துத் தெரிவித்தார்.*

*இவ்வாலோசனையை ஏற்றுக்கொண்ட நளீம் ஹாஜியார் அவர்கள் அதற்கான ஏற்பாடுகளை உடனே மேற்கொண்டார். கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி, அதிபர் யூ.எம். தாஸின், ஹிப்பதுல்லாஹ் ஹாஜியார், ஏ.ஆர்.எம். சுலைமான் ஹாஜியார், ஏ.ரீ.என்.பாயிஸ் ஹாஜியார் ஆகியோர் அடங்கிய குழு 1972 இல் பாகிஸ்தான் பயணமாகியது. 03.07.1972 இல் அஸீஸ் அவர்கள் மிகவும் நேசித்த, அவரது துணைவியார் காலமானார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.*

*ஜாமிஆ நளீமிய்யா உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படுவதற்கு இரு மாதங்களுக்கு முன்னர், 1973 ஜூன் 23, 24 ஆம் திகதிகளில் நடைபெற்ற வை.எம்.எம்.ஏ. யின் 23 வது வருடாந்த விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, எ.எம்.எ. அஸீஸ் ஆற்றிய உரை கூர்ந்து கவனிக்கத்தக்கது. ''இஸ்லாத்தை நன்கு தேர்ந்து, இஸ்லாத்திற்காக வாழ்வை அர்ப்பணித்து, ஜூம்ஆப் பள்ளிவாசலை சமுதாயத்தின் ஒரு மையமாக ஆர்வத்துடன் ஏற்படுத்தக் கூடிய உலமாப் பெருமக்களின் புதிய பரம்பரையொன்று உருவாகுவதை நாம் உற்சாகத்துடன் ஆதரிக்கவேண்டும்'' என அவ்வுரையில் அவர் அப்போது குறிப்பிட்டார். (இலங்கை முஸ்லிம் தலைவர்கள் எ.எம்.எ.அஸீஸ் ஆசிரியர் ஏ.ஆர்.ஏ.நூர் அமீன், நூலகர், நளீமிய்யா இஸ்லாமியக் கல்விக் கழகம், பேருவளை, வெளியீடு அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவை - நவம்பவர் 1980)*

*ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்துக்கான முதல் மாணவர் தொகுதியைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை, நளீம் ஹாஜியாரின் வெள்ளவத்தை இல்லத்தில் அறிஞர் எ.எம்.எ. அஸீஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. நேர்முகப்பரீட்சையின் ஒவ்வொரு நாளும் அஸீஸ் பிரசன்னமாகியிருந்தார். அவரின் வசீகரித் தோற்றம் இன்றும் எம் நெஞ்சில் நிழலாடுகின்றது. அங்கு அவர் ஒவ்வொரு மாணவரிடமும் தனிப்பட்ட முறையில் வினாக்ளைத் தொடுத்து கலந்துரையாடியதனை இன்றும் நாம் நினைவுகூருகின்றோம். எனது நேர்முகத் தேர்வின் இறுதிக் கட்டத்தில் அறிஞர் அஸீஸ் அவர்கள் மேசையில் இரு கைகளையும் ஊன்றி, சற்று முன் எழுந்து, எனக்கு சலாம் கூறியதும் அதற்கு நான் பதிலளித்ததும் இன்றும் நினைவிலுள்ளது. அறிஞர் எ. எம். எ. அஸீஸ் அவர்களை ஜாமிஆவில் சந்தித்த மாணவர்கள், முதல் தொகுதி மாணவர்கள் மட்டுமே. ஏனெனில் ஜாமிஆ நளீமிய்யா ஆரம்பிக்கப்பட்டு சுமார் மூன்று மாதங்களில் அஸீஸ் அவர்கள் இறையடியெய்தினார்கள்.*


*தமிழை, அறபு எழுத்துக்களில் எழுதுவது அறபுத் தமிழாகும். நம் முன்னோர் பள்ளி வாசல்களுடன் இணைந்திருந்த, 'மக்தப்'களுக்கு மட்டும் கற்பதற்காகச் சென்ற காலங்களில்*

பாடசாலைக் கல்வியில் பெருமளவு ஆர்வம் காட்டவில்லை. எனினும் அவர்கள் அறபு மொழியை வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டனர். குர்ஆன் உட்பட ஏனைய கிரந்தங்களையும் அவர்கள் நன்றாக வாசிப்பர். தென்இந்திய முஸ்லிம்கள் தாம் இயற்றிய இலக்கியங்களை அறபுத்தமிழில் எழுதி அச்சிட்டனர். இதனால் இலங்கை முஸ்லிம்கள் மத்தியிலும் அறபுத்தமிழ் பரிச்சயமானது. நம்முன்னோர் அறபுத் தமிழை சரளமாகப் பிரயோகிக்கத் தொடங்கினர். இன்று அது அருகி அழிந்துவிட்டது.

முஸ்லிம்களின் வீட்டு மொழியாக அறபைக் கொண்டுவருவதில் ஆர்வம் காட்டியவர் முகம்மது காசிம் சித்தி லெவ்வை ஆவார். அறிஞர் அஸீஸும் அறபு மொழிக்கும் அறபுத் தமிழுக்கும் முக்கியத்துவம் வழங்கினார். அவர் அறபுத்தமிழைப் பாதுகாப்பதில் அதிக ஆர்வம் செலுத்தினார். ஒலிக்குறி ஒருமைப்பாடு, அறபுத்தமிழ் அகராதி, அறபுத்தமிழ் இலக்கியக்கோவை என்பன எமது அத்தியாவசியத் தேவை என வலியுறுத்தினார்.

ஒருமுறை ஜாமிஆ நளீமிய்யாவின் தாபக அதிபர் எமது மதிப்புக்குரிய மௌலவி யூ. எம். தாஸீன் (நத்வி, அல் அஸ்ஹரி) அவர்கள், அறிஞர் அஸீஸ் அவர்களை எமது வகுப்பறைக்கு அழைத்துவந்தார். நல்ல உயரமும் சிவந்த நிறமும் சிரித்த முகமும் கொண்ட அவர், அனைவரையும் கவரத்தக்கவர். அவரின் கையில் ஒரு அடுக்கு புத்தகங்கள் இருந்தன. 'அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்' என்ற அவரின் நூலே அவை.

முதலில் நூல் அறிமுகம் இடம்பெற்றது. தொடர்ந்து, அஸீஸ் அவர்கள் தனது கரங்களினால் எம் அனைவருக்கும் அவற்றை அன்பளிப்பு செய்தார். நாம் அவருக்கு கைகளைக்கொடுத்து, சலாம்செய்து அவற்றைப் பெற்றுக்கொண்டது இப்போதும் நினைவிலுள்ளது. இறுதியில் எமது அதிபர் மௌலவி யூ. எம். தாஸீன் அவர்கள் எம்மில் ஒருவரை நன்றியுரைக்கு அழைத்தபோது நாம் அமைதியாக இருந்தோம். அப்போது எமது வகுப்புத்தோழர், அபுல்பசர் பெயர்கூறி அழைக்கப்பட்டார். அவர் நன்றியுரை வழங்கினார்.





ஜாமிஆ நளீமிய்யாவின் திட்டத்தில் ஜாமிஆ நூலகத்திற்கு அஸீஸ் சிறப்பிடம் அளித்ததாக, அஸீஸ் காலத்து ஸாஹிறாவின் ஆசிரியரும், எழுத்தாளரும், நூலகருமான எஸ்.எம். கமால்தீன் குறிப்பிடுகின்றார். நளீமிய்யா நூலகத்தைத் திட்டமிடும் வாய்ப்பு அறிஞர் அஸீஸ் அவர்களினால் கமால்தீன் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனால் அஸீஸின் சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பும் தனக்குக் கிடைத்ததாக கமால்தீன் சிலாகித்துக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. *(கலாநிதி எம்.எம்.ஏ.அஸீஸ் (நினைவு தினக் கட்டுரைகள், எஸ்.எம்.கமால்தீன், அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்கப் பேரவை (Y.M.M.A.) வெளியீடு - 1990)*

ஜாமிஆவின் நூல்நிலையம் உசாவுதலுக்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்ற வகையில் இருப்பதுடன், அது

*வெளிநாட்டினருக்கும் பயன்மிக்கதாக அமையவேண்டு மெனவும், அறபு மொழி உட்பட வேறு மொழிகளிலுள்ள இஸ்லாமிய நூல்கள் இந்நூலகத்தில் இடம்பெற வேண்டுமெனவும், அறபுத் தமிழ் நூல்களையும் கையெழுத்துப் பிரதிகளையும் இங்கு சேகரித்துப் பாதுகாத்து வைப்பதற்கும் விசேஷ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டல் வேண்டுமெனவும் ஜாமிஆ நளீமிய்யா பற்றிய அறிமுகக் கையேடு குறிப்பிடுகின்றது.*

*ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் தனது மரணத்தின் பின்னர் விலைமதிப்பற்ற, பெரும்பாலும் அவரது அனைத்து நூல்களையும் ஜாமிஆவுக்கு வழங்கிய வள்ளலாவார். அவரது நூல்கள் ஜாமிஆவுக்கு ஜீப் வண்டியில் வந்து சேர்ந்தன. எமது வகுப்பறைக்குப் பக்கத்துக்கு அறையில் தொடங்கப்பட்டிருந்த சிறிய வாசிகசாலையில் அவை அடுக்கப்பட்டன. அவரின் பென்சில் குறிப்பு இல்லாத எந்தவொரு புத்தகமும் அதில் இருக்கவில்லை. அப்போது நாம் அவற்றை எடுத்து ஆச்சரியமாகப் பார்ப்போம். பின்னர் எகிப்திலிருந்தும் பல சிறிய கொள்கலன்களில்*



***1947 காலப்பகுதியில் எகிப்து, அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்துக்குச் சென்ற மாணவர்கள்***

***இடமிருந்து வலம் :*** *1. மௌலவி உபைத்துஸ்ஸத்தார் (ஹபுகஸ்தலாவ, நாவலப்பிட்டி), 2. ஏ.எச்.எம். ஹுசைன் (மாளிகாகந்த மருதானை), 3. கொழும்பை சேர்ந்த மௌலவி அலவி அபுல்ஹசன் (திருமணம்: நாம்புலுவ, பஸ்யால), 4. மௌலவி ஏ.ஆர்.எம். சுபைர் (மாவனல்லை, பின்னர் இவர் வியங்கொடையில் வசித்தார்)*

***புகைப்பட உதவி:*** ( <https://azeezfoundation.com>)

***இனம்காண உதவி:*** *மௌலவி எம்.வை.எம். ஜாபிர் (கல்எலிய, ஆசிரியர் எம்.என்.எம். நியாஸ் நாம்புமுவை, பஸ்யாலை)*



*1964 காலப்பகுதியில் அல் அஸ்ஹர் சென்றோர்*

**இடமிருந்து வலம் :** *1............... 2. கல்பிட்டியைச் சேர்ந்த மௌலவி பிச்சைத்தம்பி முஹம்மது இப்ராஹிம், (பூகொடையில் திருமணம் முடித்தவர்), 3. அறிஞர் எ.எம்.எ. அஸீஸ் 4.மௌலவி எம்.எச்.எம். பளீல் (மல்வானை), 5. ஜாமிஆவின் தாபக அதிபர் மௌலவி யூ.எம். தாஸீன், 6. மௌலவி ஜுனைத் (காலி)*

***புகைப்பட உதவி:*** *முகம்மது இர்ஷாத் பளீஸ்*

***இனம்காண உதவி :*** *மௌலவி எம்.வை.எம். ஜாபிர் - கல்எலிய)*

***நன்றி :*** *மௌலவி எம்.எச்.எச்.எம் முனீர், அதிபர், இஸ்லாஹியா பெண்கள் அறபுக் கல்லூரி, புத்தளம்*

எமது நூல் நிலையத்திற்கு புத்தகங்கள் வந்துசேர்ந்தன. பழையதும் புதியதுமான புத்தகங்கள் அவை. 'சுந்தூக்குத் துன்யா பதிப்பகப் புத்தகங்களும் அவற்றில் அடங்கியிருந்தன.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை நம்பிக்கையாளர் சபை உறுப்பினர் ஏ.ஆர்.ஏ. நூர் அமீன் அவர்கள் அப்போது ஜாமிஆவின் நூலகராக இருந்தார். இவரே ஜாமிஆவின் முதலாவது நூலகருமாவார். நூர் அமீன் அவர்கள் எ.எம்.எ. அஸீஸின் நெருங்கிய நண்பரும், அஸீஸினால் ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்கத்தின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களுள் ஒருவருமாவார். நூலகர் நூர் அமீன், நிருவாக அலுவலர் ஐ.எல்.எம். நிலாம் ஹாஜியார், அதிபர், உப அதிபர் ஆகியோருக்குப் பின்னர் ஜாமிஆவில் இணைத்து விவசாய ஆசிரியர் முஹியத்தீன் பாவா போன்றோர் ஜாமிஆவில் சேருவதற்குக் காரணம் எ.எம்.எ. அஸீஸ் அவர்களே.



***இடமிருந்து வலம் :*** 1. A.M.A. Azeez 2. A.M. Ameen (Judge) 3. Naleem Hajiar 4. HE Ambassador Khalifa abdulaziz Musthafa 5. Dr. U.L.M. Basheer (China fort) 6. Al Haj Razik Yusoof (China fort)

***புகைப்பட உதவி:*** https://azeezfoundation.com> )

***இனம்காண உதவி :*** A.H.A. Kahhar, Chaina fort )

*எகிப்தினால் வசீகரிக்கப்பட்டிருந்தவர் அஸீஸ். அவர் எகிப்துக்கு நான்கு தடவை சென்றுள்ளார். 1947 இல் எகிப்து சென்றபோது பத்துவார காலம் அங்கு தங்கியிருந்தார். இக்காலப்பகுதியில் இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியத்தினால் நான்கு மாணவர்கள் எகிப்து, அஸ்ஹர் கலாநிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் எகிப்தில் கற்ற காலப்பகுதியில் அறிஞர் அஸீஸ் அவர்கள், 'அகில இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதி'த் தலைவர் என்றவகையில், அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்துக்கு சென்று, அதன் தலைவர், ஷெய்குல் அஸ்ஹர் ஷெய்கு முஸ்தபா அப்துர் ராசிக் உட்பட பலருடன் பல்கலைக்கழகக் கலைத்திட்டம் பற்றியும், இலங்கை எகிப்திய தொடர்புகள் பற்றியும் கலந்துரையாடியுள்ளார்.*

*06.11.1964 இல் கொழும்பு, ஐக்கிய அரபு ஸ்தானிகராலய உதவியுடன் எமது அதிபர் மௌலவி யூ.எம். தாஸீன், உட்பட சிலர் அல் அஸ்ஹர் சென்றனர். 1965 இல் எ.எம்.எ. அஸீஸ் அங்கு அவர்களை சந்தித்துள்ளார். 1978 இல் நளீமியாய்வின் முதல் தொகுதி மாணவர்களான ஜே.எம். உவைஸ், ஏ.எம். அபுவர்தீன், வை. அபுல்பஷர், எம்.ஐ.எம். நியாஸ் ஆகியோருடன்*

ஜாமிஆவின் உப அதிபர் மௌலவி ஏ.எம்.சீ.எம்.புஹாரி, விரிவுரையாளர் எஸ்.எல்.எம். ஹசன் ஆகியோரும் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்துக்கு புலமைப்பரிசில் பெற்றுச் சென்றனர்.

முஸ்லிம்கள் எகிப்துடன் தொடர்புகொண்டவர்களாக இருக்கவேண்டுமென்ற அவா அறிஞர் அஸீஸுக்கு இருந்தது. 'இலங்கையில் இஸ்லாம்' என்ற நூலில், 'ஜாமிஉல் அஸ்ஹர்' என்ற கட்டுரையில், 'நம் முன்னோர் ஆங்கிலக் கல்வியை வெறுத்தபோது கலை, கலாசார பாரம்பரியம் கொண்ட எகிப்திலிருந்து, ஒறாபி பாஷா குழுவினர் இலங்கை வந்து, அவ்வெண்ணம் தவறானது என்று சுட்டிக்காட்டி கல்வியில் ஆர்வமூட்டினர்', என்ற கருத்துக்களைத் தெரிவிக்கும் அவர், 'அரசினர் பாடசாலைகளில் இன்று அறபு மொழிக்கு முக்கியம் வழங்கப்பட்டுள்ள நிலையினை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்வதற்கு, மிஸ்ரில் பரவிவரும் போதனா முறைகளைப்பற்றியும், அங்கு புதிதாக இயற்றப்பட்டுள்ள புதிய அறபுப் பாடப் புத்தகங்களையும் பற்றிய அறிவு எமக்கு அவசியமாகும்' என்றும் குறிப்பிடுகிறார்.

நளீமிய்யா ஆரம்பிக்கப்பட்டபோது எகிப்திய தூதுவராலயத்துடன் அது நெருங்கிய உறவைக்கொண்டிருந்தது. அந்நாட்டுத் தூதுவர் கலீபா அப்துல் அஸீஸ் முஸ்தபா அவர்கள் ஜாமிஆ நளீமிய்யாவின் அங்குரார்பணதினமன்று சமுகமளித்திருந்தார். அவர் இலங்கையிலிருந்து நாடு திரும்பும்போது ஜாமிஆவில், நளீம் ஹாஜியாரின் தலைமையில் பிரியாவிடை வைபவமொன்று இடம்பெற்றது. அதில் உரையாற்றிய தூதுவர் அவர்கள், ''இந்த ஜாமிஆவில் பயின்ற சிறந்த மாணவர்கள் சிலருக்கு எகிப்து அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தில் தமது மேற்படிப்புக்காக வசதிகள் செய்து கொடுக்கப்படு''மெனக் குறிப்பிட்டார். இங்கு உரையாற்றிய ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள், இந்த நிகழ்வு 1901 இல் இலங்கை முஸ்லிம்கள் ஒறாபி பாஷாவுக்கு அளித்த பிரியாவிடையைத் தமக்கு நினைவூட்டுவதாகத் தெரிவித்தார். எமது அதிபர் மௌலவி யு. எம். தாஸீன் அவர்களும் அவ்வமயம் உரையாற்றினார்.

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் வரலாற்றுத்துறையில் பட்டம் பெற்ற ஏ.எம். ஏ. அஸீஸ், இலங்கை அரசாங்கத்தின் புலமைப் பரிசில் பெற்று, லண்டன் கேம்ரிஜ் பல்கலைக் கழகத்துக்கு மேற்படிப்பிற்காச் சென்றார். அதேவேளை இலங்கை சிவில் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்ததனால் படிப்பைக் கைவிட்டு நாடுதிரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது. அஸீஸ் அவர்களின் மரணத்தின் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவரின் நூல்கள், ஆய்வுகள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு 1980 ஆம் ஆண்டில் அன்னாருக்கு இலக்கியக் கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. இதைப்பற்றி பேராசிரியர் டப்ளியு.எல். ஜெயசிங்கம், பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

''அறிஞர் அஸீஸ் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றிய ஆய்வை மேற்கொள்ள இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்திற்காகத் தம்மை பதிவுசெய்து கொண்டிருந்தபோதும், பேருவளை ஜாமிஆ நளீமிய்யாவைத் திட்டமிடும் பணியில் அவர் முழுமூச்சாக ஈடுபட்டிருந்ததனால் தமது ஆய்வினைப் பூர்த்திசெய்துகொள்ள முடியாமல் போய்விட்டது. இதனால் அவரது ஆய்வின் பலன் அறிவுலகிற்கும் சிறப்பாக முஸ்லிம் உலகிற்கும் கிட்டாமல் போனது பேரிழப்பாகும்''.

*அஸீஸ் அவர்கள் தனது இறுதிக் காலத்தில் ஜாமிஆமீது மிகவும் நேசம் கொண்டிருந்தார். நளீமிய்யாவைத் தரிசிக்க ஆவலாக இருந்த நிலையில் 24 நவம்பர் 1973 அன்று அவர் இறையடி சேர்ந்தார். அன்று காலை ஆறு மணியளவில் தனது புதல்வர் அலி அஸீஸிடம், காலம்சென்ற தாயாரின் சொத்துக்களை, வாரிசுகளுக்குப் பிரித்து வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகளை செய்யுமாறும், தான் ஜாமிஆ நளீமிய்யாவுக்கு சென்று ஐந்து, ஆறு நாட்களின் பின்னரே திரும்ப இருப்பதாகவும் கூறியுள்ளார். அன்றைய தினம் பகற்போசனத்தின் பின்னர் மார்பு வலியினால் பாதிக்கப்பட்ட அவர் 'ரத்னம்' தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு காலமானார். மறுநாள் ஞாயிற்றுக்கிழமையன்று அவரின் ஜனாஸா மருதானை பள்ளிவாசலில் தொழுவிக்கப்பப்பட்டு குப்பியாவத்தை மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அஸீஸ் அவர்கள் மரணித்த செய்தி அறியாமலே, ஞாயிறன்று காலை ஜாமிஆவின் நூலகர் நூருல் அமீன் அவர்கள், அஸீஸ் அவர்களை ஜாமிஆவுக்கு அழைத்துச் செல்ல, அவர் வீட்டுக்கு வருகை தந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ.எம்.எ. அஸீஸின் மகன், அலி அஸீஸுடனான நேர்காணல் - 2023)*

*ஜாமிஆ நளீமிய்யாவின் பணிப்பாளர் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அவர்கள், அஸீஸ் அவர்களின் நினைவுதினத்தை முன்னிட்டு 1990 இல் இடம்பெற்ற சொற்பொழிவொன்றில், பின்வருமாறு குறிப்பிட்டார். ''எதிர்கால சந்ததியினருக்கு, இஸ்லாமிய நெறிமுறைகளுடன் கூடிய கல்வி, கற்றல், புலமைப்பரிசில் என்பனவற்றை மேம்படுத்தக்கூடியதாக இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதி (C.M.S.F.), அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்கம் (Y.M.M.A.), ஸாஹிறாக் கல்லூரி, ஜாமிஆ நளீமிய்யா ஆகியவற்றை உருவாக்குவதே அவரின் முதன்மை எண்ணங்களாக இருந்தன''.*

*பாகிஸ்தான் நாட்டின் தலைசிறந்த அறிஞரும் சட்டவல்லுனரும் எழுத்தாளருமான ஏ.கே. புரோஹி அவர்கள், அஸீஸ் பற்றிய ஞாபகார்த்த உரையொன்றில் குறிப்பிட்ட கருத்துக்கள் பின்வருமாறு:*

*''முஸ்லிம்களின் அறிவுத்துறையில் வளர்ச்சிக்காகவும் அவர்தம் சமூக வாழ்வு வளம்பெறவும், அஸீஸ் அளித்த புத்தூக்கம் அளப்பரியதாயுள்ளது. உண்மையில் அஸீஸ் போன்றோர் மரணிப்பதில்லை. மக்களின் உள்ளங்களிலே ஒளியேற்றி வைப்பதற்காக ஓயாது உழைப்பவர்கள். மக்களுக்காகப் பணிபுரிவதாகப் பாசங்கு செய்பவர்களைப்போலன்றி அதி உன்னத வாழ்வுநிலையை எய்துகிறார்கள்''.*

*கலாநிதி எ.எம்.எ. அஸீஸ் (நினைவு தினக் கட்டுரைகள்) என்ற நூலில் எஸ். எம். கமால்தீன் பின்வருமாறு தெரிவிக்கின்றார். 'அறிஞர் அஸீஸ் அவர்களின் ஆர்வமெல்லாம், அவரது வாழ்க்கையின் இறுதிக்கட்டமாக வேருவளையில் உருவாகியுள்ள ஜாமியா நளீமிய்யாவென்ற இஸ்லாமிய்ய அறிவுப்பீடத்தின் அமைப்பில் பாய்ச்சப்பட்டது. அந்தக் கலைக்கூடத்தின் தோற்றத்திலேயே தோய்ந்துவிட்டார் அஸீஸ்'.*

*ஜாமிஆ நளீமிய்யாவின் அங்குரார்பணமன்று அதன் தாபகரும் ஆயுட்காலத் தலைவருமான அல்ஹாஜ் எம்.ஐ.எம். நளீம் அவர்கள் ஆற்றிய உரையில் ஜாமிஆவைத் தோற்றுவிப்பதில்*

*மூன்று சாரார் முன்னின்று உழைத்ததாகத் தெரிவித்தார்கள். அவர்களுள் ஒரு சாரார் செல்வந்தர்கள், இன்னொரு சாரார் சன்மார்க்க மேதைகள் மூன்றாவது சாரார் உலகக் கல்வியைக் கற்ற கல்விமான்கள் ஆகியோரே அவர்களாவர். இக்கல்விமான்களுள் அறிஞர் எ.எம்.எ. அஸீஸ், நீதிபதி அல்ஹாஜ் ஏ.எம். அமீன் போன்றோர் முக்கியமானவர்களாவர்.*

*ஜாமிஆவின் உருவாக்கத்துக்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் பாடுபட்ட அனைவரது பாவங்களையும் அல்லாஹுத்தஆலா மன்னித்து அவர்களின் நல்லெண்ணங்கள் நிறைவேற அந்த வல்ல அல்லாஹ்வையே இறைஞ்சுகின்றோம்.*

*(10.11.2022, 17.11.2022 ஆகிய தினங்களில் 'விடிவெள்ளி' பத்திரிகையில், 'ஜாமிஆ நளீமிய்யாவின் கலைத்திட்ட முன்னோடி அறிஞர் எ.எம்.எ. அஸீஸ்' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையின் செவ்விதாக்கம்)*

*(உசாவுதலுக்கு:* https://puttalamonline.com>*)*

**குறிப்பு :** *அறிஞர் அஸீஸ் அவர்கள் தனது பெயரை 'எ.எம்.எ.அஸீஸ்' என்றே எழுதினார். தமிழிலும் அவ்வாறே கையெழுத்திட்டார்.*